**குஷி தந்த குதிரைவாலி.. கலகலப்பாக்கிய கம்பு**

சென்னையில் பணியாற்றி வரும் மாவட்ட நீதிபதி சடையாண்டி மற்றும் அவருடைய துணைவியார் சுசீலா ஆகியோர், பணி காரணமாகவும் போதுமான நீராதாரம் இல்லாமையாலும் விவசாயத்தை விட்டு விலகியிருந்தவர்கள். சொந்த ஊரான மதுரை மாவட்டம், எழுமலை கிராமத்திலிருக்கும் தங்களுடைய நிலங்களின் மீது பார்வையைத் திருப்பி, தற்போது தீவர விவசாயியாகவே மாறியிருக்கின்றனர். குதிரைவாலி, கம்பு, துவரை, மொச்சை, கல்லுப்பயிறு (அழிவின் விளிம்பில் இருக்கும் பயிறு வகைகளில் ஒன்று), பல்லாண்டுத் துவரை, வெற்றிலை வள்ளி, நெல், காய்கறிகள் என இயற்கை முறையில் விவசாயம் செய்து வருகின்றனர்.சித்திரையில் உழவு போட்டா நிலத்தில் பொன்னு விளையும் என்று சொல்வார்கள். அந்த அளவிற்கு ஒரு சிறப்பு இருக்கு.எங்க பகுதியில் போதுமான தண்ணீர் வசதியில்லை. சரியா தண்ணீர் கிடைத்தால், இது பொன்னு விளையிற பூமிதான்.

இந்த நிலங்களில் ஒரு காலத்தில் குதிரைவாலி, சாமை, கம்பு, சோளத்தைத்தான் விதைப்பார்கள். எங்ககிட்ட பெரும்பாலும் மானாவாரி நிலம் தான். அதில் மூன்று வருடமாக வெள்ளாமை செய்யவே இல்லை. இப்பத்தான் 20 ஏக்கரில் மட்டும், சட்டி கலப்பையால் கொத்தி விட்டு, 5 கலப்பையால் இரண்டு உழவு போட்டு விட்டுட்டோம். பிறகு ஆடியில் நான்கு உழவு போட்டு விதைத்தோம். குதிரைவாலி மானாவாரி நிலங்களுக்கு ஏற்ற பயிர். கிட்டத்தட்ட நூறு நாளில் அறுவடைக்கு வந்துவிடும். ஒன்றிரண்டு மழை கிடைத்தாலே நல்ல மகசூல் கிடைக்கும். நாங்கள் மொத்தம் ஐந்து ஏக்கரில் குதிரைவாலி விதைத்தோம். ஏக்கருக்கு ஐந்து கிலோ விதைகள் வீதம் மொத்தம் 25 கிலோ விதைகள் தேவைப்பட்டன. 'சால்' பயிராக ஏக்கருக்கு துவரை நான்கு கிலோ, மொச்சை, தட்டை, கல்லுப் பயிறு எல்லாம் கலந்து நான்கு கிலோவும் விதைத்தோம். ஆறு உழவு போட்டதாலும், மழை சரியாக பெய்யாததாலும் அதிகமாக களை இல்லை. அதனால் நாங்கள் களை எடுக்கவில்லை.

நடவுக்குப் பிறகு ஒருமுறை மட்டும் ஏக்கருக்கு 100 கிலோ மண்புழு உரத்தை தூவியதோடு சரி, அடுத்தது அறுவடைதான்.தட்டையை நிலத்திலேயே விட்டுவிட்டு கதிரை மட்டும் மார்கழி முதல் வாரத்தில் அறுவடை செய்தோம். எங்கள் பகுதியில் தானியத்தைதான் கூலியாக வாங்குகிறார்கள். 5 ஏக்கர் குதிரைவாலி அறுவடை செய்து, டிராக்டர் விட்டு நசுக்கி, தூற்றி எடுத்ததில் கூலி கொடுத்தது போக 23 குவிண்டால் மகசூல் கிடைத்தது. குவிண்டால் 1,650 ரூபாய் விலையில் விற்பனை செய்தோம். செலவு போக 5 ஏக்கரில் 25 ஆயிரம் ரூபாய் கிடைத்தது. சால் பயிராக விதைக்கப்பட்ட துவரை உள்ளிட்ட மற்ற பயிறுகளின் வருமானம் தனி.

**தெம்பு கொடுத்த கம்பு!**

குதிரைவாலிக்கு செய்தது போலவே உழவு போட்டு, மொத்தம் 15 ஏக்கரில் கம்பு விதைத்தோம். இதுவும் 100 நாள் பயிர் தான். ஏக்கருக்கு ஐந்து கிலோ விதைகள் வீதம், மொத்தம் 75 கிலோ விதைகள் தேவைப்பட்டன. சால் பயிராக ஏக்கருக்கு துவரை நான்கு கிலோ, மொச்சை, தட்டை, கல்லுப் பயிறு எல்லாம் கலந்து 4 கிலோ விதைத்தோம். இடையில் ஒரு முறை 100 கிலோ மண்புழு உரம் மட்டுமே கொடுத்தோம். வேறு எந்த பண்டுதமும் இல்லாமல் ஏக்கருக்கு சராசரியாக ஆறு குவிண்டால் கம்பு

கிடைத்தது. மொத்தம் 15 ஏக்கரில் கூலி போக, 87 குவிண்டால் மகசூல் கிடைத்தது. குவிண்டால் 820 ரூபாய் வீதம் விற்பனை செய்தோம். செலவு போக 15 ஏக்கரில் 50 ஆயிரம் ரூபாய் லாபமாகக் கிடைத்தது. சால் பயிராக விதைத்த பயிறு வகைகளின் வருமானம் தனி.

**பலே பல்லாண்டு துவரை!**

மொச்சை 2 டன் மகசூல் கிடைத்தது. துவரையை இன்னும் அறுவடை செய்யவில்லை. காய் நல்லா பிடிச்சு இருக்கு. அறுவடை முடிஞ்சதும் தான் எவ்வளவு கிடைக்கும் என்று தெரியும். எங்களுக்கு தண்ணீர் வசதியோடு சிறிது இடம் இருக்கு. ஐந்து சென்ட்டில் 100 கிராம் பல்லாண்டுத் துவரை விதையை மூன்று அடி இடைவெளியில் நட்டு அதில் ஊடுபயிராக வெங்காயம், வெற்றிலை, வள்ளிக் கிழங்கு, அகத்தி, கீரை, பாசிப் பயிறு நடவு செய்தோம். பல்லாண்டுத் துவரை, செடியே ஒடிந்து விழுவது போல் காய் பிடித்திருந்தது.50 சென்டில் மண்ணச்சநல்லூரி பொன்னியை நட்டி இருக்கோம். வேப்பிலை, கொழிஞ்சி, ஆவாரை தழைகளை நிலத்தில் போட்டு மிதிச்சுதான் நாத்து நட்டோம்.

நடவுக்குப் பிறகு ஒரு தடவை 50 கிலோ மண்புழு உரம், ஒரு மாதத்தில் 50 கிலோ வேப்பம் புண்ணாக்கு, 50 கிலோ கடலைப் புண்ணாக்கு, என்று இவை அனைத்தையும் சிறிது சிறிதாகக் கொடுத்தோம். கதிர் வைத்த பின்பு மீன் அமினோ அமிலம் ஒரு தடவை அடித்தோம். பயிறு தெளிவாக இருக்கிறது.உழவு மட்டும் போட்டு விதைத்தாலே மகசூல் தருகிற இந்த மாதிரி சிறுதானியங்களைத்தான் இனிமே தொடர்ந்து விளைவிக்கப்போகிறோம். குதிரைவாலி மாதிரியான சிறுதானியங்களுக்கு அதிக விலை கிடைக்கிறது. அதற்கு தேவையும் ஏற்பட்டிருக்கிறது.

**தொடர்புக்கு:**

திருமதி. சுசீலா,
எழுமலை கிராமம்,
மதுரை மாவட்டம்.
அலைபேசி: 94423 - 63064